டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.09.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 082 | Madurai | Online Edition

# தமிழகத்தில் 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப்.24

தமிழகத்தில் இன்று (செப்.25) முதல் 6 நாட்களுக்கு ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையில் நகர்ந்து கலிங்கப்பட்டினத்துக்கு மிக அருகில் கரையை கடந்துள்ளது.

தமிழகத்தில் இன்று (செப்.25) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரியிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

செப்.26-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். செப்.27 முதல் 30-ம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

# காடையாம்பட்டி வட்டாரத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் விவசாயிகள் பயிற்சி



சேலம், செப்.24

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விவசாயிகள் பயிற்சி செம்மாண்டப்பட்டியில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி அனைவரையும் வரவேற்று, ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய பல்வேறு பயன்கள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரை யாடினார்.

பயிற்சிக்கு தலைமையேற்ற காடையாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம், வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், மானியங்கள் மற்றும் அவற்றை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளும் முறைகள் குறித்து விளக்கினார்.

சிறப்புரையாற்றிய சேலம் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் அருணா, ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய பொருளாதார வாய்ப்புகள், வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் பண்ணையின் பல்வேறு செயல்பாடு களை ஒருங்கிணைத்து மேற்கொள்வதன் அவசியம் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

பயிற்சிக்கு பயிற்றுநராக ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குநர் பழனியப்பன், ஒருங்கிணைந்த பண்ணையத்தில் பயிர்கள், காய்கறிகள், பழங்கள், மலர்கள், மரப்பயிர்கள் மற்றும் தீவனப் பயிர்கள் ஆகியவற்றை ஒருங்கிணைந்து சாகுபடி

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

செய்வதுடன், மண்புழு உரம் தயாரித்தல், பரண்மேல் ஆடு வளர்ப்பு, கறவை மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற உபதொழில்களையும் ஒருங்கிணைந்து மேற்கொள்வதன் மூலம் பண்ணையின் வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த முடியும் என விளக்கினார்.

மேலும், ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் ஒரு தொழிலில் இருந்து கிடைக்கும் கழிவுகளை மற்றொரு தொழிலுக்கான இடுபொருளாகப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து, கூடுதல் வருமானம் பெறுவதுடன், நிலையான மற்றும் நீடித்த வேளாண்மையை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி வேளாண்மை அலுவலர் மதிவாணன் மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் மோகன்ராஜ் ஆகியோர் சிறப்பாக செய்திருந் தனர்.

பயிற்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கக்கூடிய பொருளாதார வாய்ப்புகள் குறித்து பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**47. தக்காளி–கேரட் சூப்**

**தேவையான பொருட்கள்**

தக்காளி – 2

கேரட் – 2

வெங்காயம் – 1

மிளகு தூள் – ½ டீஸ்பூன்

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

தக்காளி, கேரட்டை வேக வைத்து அரைத்து 5–7 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# விவசாயிகள் விதையை பற்றி கவனிக்க வேண்டியவைகள்

திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வயகத்தில் ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத்திறன் பரிசோதனை மேற் கொள்ளப்படுகிறது, முளைப்புத்திறன் என்பது விதையின் உயிரும் வீரியமும் கொண்டு இயங்குவதைக் காட்டுவது ஆகும், நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைக்குவியல்களிலிருந்து விதைகளை பயன்படுத்தும் பொழுது பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுவதுடன். பயிர்களும் வயலில் செழித்து வளரும், முளைப்புத்திறன் குறைவாக உள்ள விதைகளை பயன் படுத்தினால் பயிர் எண்ணிக்கை குறைவதுடன் பயிரும் செழித்து வளராது, இதனால் பயிர் மகசூல் பாதிக்கப்படும், விதைச்சட்டம் 1966 பிரிவு 7(பி)ன்படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கப் பட்டுள்ளது, மக்காசோளம் – 90 சதம். நெல், எள், கொள்ளு – 80 சதம். சோளம், கம்பு, கேப்பை, வீரிய ஒட்டு பருத்தி, பயறு வகைகள் – 75 சதம். நிலக்கடலை, சூரியகாந்தி – 70 சதம். இரகப் பருத்தி – 65 சதம், மிளகாய் – 60 சதம் ஆகும்,

பயிர்களுக்கு ஏதுவான சூழ்நிலையில் விதையின் கருமுளை விட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற்குரிய திறனே முளைப்புத் திறன் ஆகும், முளைப்புத்திறன் சோதனையின் போது இயல் பானது. இயல்பற்றது. கடினமானது. உயிரற்றது என 4 வகைப் படுத்தி சோதனை முடிவுகள் அறிவிக்கப்படும். இவற்றில் கடின விதை என்பது விதை உறையின் கடினத்தன்மை காரணமாக நீர் உட்புக இயலாத காரணத்தினால் முளைவிடாமல் இருக்கும், பயறுவிதைகள் மற்றும் வெண்டை விதைகளில் இவை தனியாக எடுத்து கணக்கிடப்படும், இவைகள் வயல்களில் முளைப்பதற்கு சாத்தியக்கூறு உள்ளதால் முளைப்புதிறன் கணக்கிடும் போது இயல்பான விதைகளுடன் சேர்த்துக் கணக்கிடப்படும்.

மேற்கண்ட முறைகளின்படி முளைப்புத்திறன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட கால அளவு களில் பயிர்களின் முளைப்புத்திறன் கணக்கிடப்பட்டு சோதனை முடிவுகள் அறிவிக்கப்படும்.

எனவே. விவசாயிகள் தங்கள் சொந்த விதைகளை விதைக்கும் போது தங்கள் விதைகளின் முளைப்புத்திறன் அறிந்து விதைத்திட தங்கள் விதைக்குவியலில் மாதிரி ஒன்று எடுத்து அதில் பயிர். ரகம் மற்றும் தேவைப்படும் பரிசோதனை விவரம் எழுதி (ளுஊணநுஊளு) வலைதளம் மூலமாக பதிவு செய்து. விதைகட்டணமாக ரூ.80 செலுத்தி திருநெல்வேலி விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளின் முளைப்புத் திறன் தெரிந்து விதைத்திடுமாறு திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் ஞா,ஆனந்தி ராதிகா தெரிவிக்கிறார்.

# மாவட்ட விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம்



மதுரை, செப்.24

மதுரை வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையில் நடப்பு ஆண்டிற்கான முதல் மாவட்ட விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (24.09.2026) நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலிருந்தும் புதிதாக தேர்ந்தெடுகப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். மேலும், வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் தீர்மானங்கள் பற்றி விவசாயிகள் தெரிவித்தனர்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையில் 2026-27ஆம் ஆண்டிற்கான முதல் தவணை நிதியாக 90.22 இலட்சம் பெறப்பட்டு அனைத்து வட்டாரங்களுக்கும் பிரித்தளிக் கப்பட்ட விவரம் குழு உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், கடந்த ஆறு மாதங்களாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி பற்றி விவரங்களும் குழு உறுப்பினர் களுக்கு தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தினை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) அ.இராணி தலைமையேற்று நடத்தினார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400119810 IS 9537 CML-6400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நிலையான வருமானம் பெற ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த பயிற்சி




விழுப்புரம், செப்.24 ICAR வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் II), கள்ளக்குறிச்சி, காளசமுத்திரத்தில் 23.09.2026 அன்று நிலையான வருமானம் பெற ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள் என்ற தலைப்பில் ஒரு நாள் கட்டணப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிலரங்கில் 26 விவசாயிகள், கிராமப்புற பெண்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இப்பயிற்சிக்கு நிலையத்தின் இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கண்ணதாசன் முன்னிலை வகித்தார். இப்பயிற்சியை மகேஸ்வரன், தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) ஒருங்கிணைத்தார். முனைவர் சோமசுந்தரம், பேராசிரியர் மற்றும் தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தலைமையுரையாற்றியதுடன், பருத்தி சார்ந்த ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து சிறப்புரையாற்றி, பருத்தியில் உற்பத்தித் திறன் அதிகரிப்பு, இடுபொருட்களைத் திறம்பட பயன்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதல் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சியில், விவசாயிகளின் நிலத்திற்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் தயாரித்தல், பயிர் சாகுபடியுடன் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு, பண்ணைக் கழிவுகளை இயற்கை இடுபொருட்களாக மாற்றுதல், கூடுதல் வருமானம் பெறுவதற்கான தேன் மற்றும் காளான் வளர்ப்பு தொழில்நுட்பங்கள், பல அடுக்கு காய்கறி மற்றும் பழப்பயிர்களுடன் கோழி வளர்ப்பு, வேளாண் காடுகளுடன் ஆடு வளர்ப்பு உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது.

சக்திவேல், உதவி தோட்டக்கலை இயக்குநர், சின்னசேலம், ஒருங்கிணைந்த பண்ணையத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். மேலும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் அரசு மானியத் திட்டங்கள் மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கினார்.

பயிற்சியின் தொழில்நுட்ப அமர்வுகளில் தொழில்நுட்ப வல்லுநர்கள் மகேஸ்வரன், வினோத், மங்களதேவி, லாவண்யா, தாவூத் இப்ராஹிம், தீபிகா கிருஷ்ணவேணி, ஸ்ரீமதி மற்றும் ரம்யா ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் தொழில்நுட்ப உரைகளை வழங்கினர்.

ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் மூலம் பண்ணையில் கிடைக்கும் வளங்களை திறம்பட பயன்படுத்தி, பல்வேறு தொழில்கள் மூலம் நிலையான மற்றும் பல்வழி வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து விவசாயி களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் நிறைவில் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## புது தில்லியில் நீர்ப்பிடிப்பு மேம்பாடு மற்றும் மேலாண்மைக்கான கலந்தாய்வுக் கூட்டம்

புது தில்லி, செப்.24

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய மழை நீர்ப்பிடிப்பு பகுதி ஆணையம், புதுமையான மேம்பாட்டின் மூலம் வேளாண் மீள்திறனுக்காக நீர்நிலைகளுக்குப் புத்துயிரூட்டுதல் (ரிவார்ட்) திட்டத்தின் கீழ், தேசிய அளவிலான தொழில்நுட்பக் குழுவின் கூட்டத்தை 22.09.2026 அன்று புது தில்லியில் நடத்தியது.



கர்நாடகா, ஒடிசா மாநிலங்களைச் சேர்ந்த, மாநில அளவிலான முதன்மை முகமைகளின் விஞ்ஞானிகள், பிரதிநிதிகள் உள்ளிட்ட சுமார் 45 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அப்போது, இம்மாநில அரசுகள், தங்களது நீர்ப்பிடிப்புத் தரவு களையும் முடிவெடுக்கும் ஆதரவு அமைப்பையும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பகிர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டது. திட்டச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு கூடுதல் அவகாசம் கிடைக்கும் வகையில், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான காலக்கெடுவை 6 மாதங்களில் இருந்து 3 மாதங்களாகக் குறைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.



# மொடக்குறிச்சி வட்டாரத்தில் தோட்டக்கலையில் செயற்கை நுண்ணறிவு குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, செப்.24

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 2 வேலம் பாளையம் கிராமத்தில் உள் மாவட்ட அளவில் தோட்டக்கலையில் செயற்கை நுண்ணறிவு (AI in Horticulture Crops) என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு 24.09.26 அன்று பயிற்சி அளிக்கப்பட்டது.

க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி வேளாண்மைத் துறை மானியத் திட்டங்கள், பசுந்தாள் பயிர்களின் மூலம் மண்வளத்தை மேம்படுத்துதல் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரங்களை பயன்படுத்துதல். மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். அரசப்பன், துணை வேளாண்மை இயக்குநர் (ஓய்வு), செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன மேலும் தோட்டக்கலை பயிர்களில் அதன் மூலம் பூச்சி மற்றும் நோயை கண்டறிதல், துல்லியமான நீர் பாசனம், பழங்களின் முதிர்ச்சியைத் தீர்மானித்தல், மகசூல் முன்னறிவிப்பு மற்றும் களை மேலாண்மை கண்டறிதல் குறித்து தெளிவாக கூறினார்.

அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக் குறிச்சி, அட்மா திட்டங்கள், உழவன் செயலி, விவசாய அடையாள எண் பதிவு செய்தல் மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்பமேலாளர், இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி தேவையா?



பருத்தி பெரும்பாலான இடங்களில் கரிசலில் மண்ணில் மானாவாரியாக தற்போது விதைக்கப்பட்டு வருகின்றன. பருத்தியில் ஊடுபயிர் (INTER CROP CULTIVATION) சாகுபடி செய்வது மிகத் தேவையான ஒன்று.

மானாவாரியில் ஒரு பயிரை மட்டும் விதைக்காமல் ஊடுபயிராக பயிரிடுவது விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் ஓரளவு பாதிப்பு குறையும். பருத்தி சாகுபடியில் அதிக செலவை ஈடுகட்டவும், பருத்தி உற்பத்தியை அதிகரிக்கவும் ஊடுபயிர் சாகுபடியை மேற்கொள்ள வேண்டும்.

**பருத்தியில் ஊடுபயிர் சாகுபடியின் முக்கிய நோக்கம்?**

ஊடுபயிர்களின் மூலமாக கூடுதல் விளைச்சலும் அதன் மூலமாக வருமானத்தை உயர்த்துவதுமேயாகும். எனவே பருத்தி விவசாயிகள் தங்களுடைய பகுதி மண்வளம், காலநிலை, பாசன வசதி, சந்தை வாய்ப்பிகேற்ப தகுந்த ஊடுபயிரை தேர்ந்தெடுத்து சாகுபடி செய்ய வேண்டும்.

**பருத்தியில் என்னென்ன ஊடுபயிர்கள் சாகுபடி செய்யலாம்?**

1) பயறுவகை பயிர் – உளுநது, தட்டைபயறு, பாசிபயறு

2) காய்கறி பயிர்கள் – சின்ன வெங்காயம், கொத்த மல்லி, பீட்ருட், தண்டுகீரை, கொத்தவரை

3) பசுந்தாள் உரப்பயிர்கள் – தக்கை பூண்டு, சணப்பு

**பருத்தியில் எந்தெந்த பயிர்களை ஊடுபயிராக பயிரிடக் கூடாது?**

1) ஊடுபயிர் பருத்தியின் உயரத்தை விட குறைவாக இருக்க வேண்டும்.

2) பருத்தி மால்வேசி (MALVACEAE FAMILY) குடும்பத்தை சேர்ந்த தாவரமாக இருப்பதால் அதே குடும்ப பயிர்களை தவிர்க்க வேண்டும்.

3) ஊடுபயிர்கள் பருத்தியுடன் போட்டி போட்டு வளரக்கூடாது. எடுத்துக்காட்டாக மக்காசோளம், சூரிய காந்தி இவற்றை பயிரிடக்கூடாது.

4) ஊடுபயிர்கள் பருத்தியை தாக்கும் பூச்சிகளால் விரும்ப படாதவைகளாக இருக்க வேண்டும். கத்திரி, தக்காளி, வெண்டை, துவரை போன்றவைகள் பூச்சிகளால் விரும்பப்படு வதால் அவற்றை தவிர்க்க வேண்டும். ஊடுபயிராக பயிரிடக் கூடாது.

**ஊடுபயிரால் ஏற்படும் நன்மைகள்?**

1) ஊடுபயிருக்கென்று கூடுதலான செலவும் எதுவுமில்லை. உரமோ, மருந்தோ தனியாக தெளிக்க வேண்டியதில்லை.

2) ஊடுபயிர் சாகுபடி செய்வதால் அந்த பயிரின் இலை தழைகள் உதிர்ந்து மண் வளம் பெறும்.

3) மண்ணை மூடி ஊடுபயிர்கள் வளருவதால் களைகள் (WEEDS) கட்டுப்படுத்தப்படுகிறது.

4) மெயின் பயிர் பாதிக்கப்பட்டாலும் கூட ஊடுபயிர் குறைந்த நாளில் நல்ல வருமானத்தை தரும். இதனால் ஓரளவு நஷ்டம் குறையும்.

5) ஊடுபயிர்கள் அறுவடைக்குபின் அவற்றின் கழிவுகள் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம்.

6) விதைக்கு மட்டுமே செலவு, மற்றபடி வேறெந்த செலவும் கிடையாது.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் போல ( ஒரே நிலத்தில் இரண்டு பயிர்கள். அதுவும் ஒரே செலவில்).

என்ன நீங்க தயாரா ஊடுபயிர் சாகுபடி செய்ய?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விதை உற்பத்தியாளர் மற்றும் விதை விற்பனையாளர்கள் விதைகளை பரிசோதனை செய்வது அவசியம்!

நாமக்கல் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் செ.தேவிப்பிரியா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

விவசாயத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதையாகும். தரமான விதை உபயோகிப்பது மிக முக்கியமாகும். தரமான விதை என்பது நல்ல முளைப்புத்திறன் உடையதாகவும், பிற இரக கலவன் இல்லாமலும், நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் உடையதாகவும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

உழவர் பெருமக்கள் தங்கள் விளை நிலங்களில் இருந்து பெறப்பட்ட தானிய வகை விதைகள், பயறு வகை விதைகள் மற்றும் எண்ணெய்வித்து போன்ற விதைகளை விதைக்காக சேமிக்கும் பொழுது அதன் தரத்தினை அறிந்து சேமித்தல் இன்றியமையாததாகும். விதையின் தரம் அறிந்து விதைத்தால் மட்டுமே உரிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக லாபம் பெற்று பயனடையலாம்.

இதற்கான பரிசோதனைகள் விதைப்பரிசோதனை நிலை யத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. நாம் உபயோகிக்கும் விதைகளுக்கு பயிர் வாரியாக தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்ட விதைகளாயினும் விதைக்கு முன் விதைப்பரிசோதனை செய்து விதைத்தல் சாலச்சிறந்த தாகும்.

எனவே விவசாயப் பெருமக்கள், தங்களிடமுள்ள விதை களையும், விதை விற்பனையாளர்கள் தாங்கள் விற்பனை செய்யும் விதைகளையும், விதை உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் விதைகளையும், விதைப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து தரமான விதைகளையே பயன்படுத்துதல் அவசியமாகும்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாக கட்டிடத்தில் அறை எண்.13 இல் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.80/– கட்டணம் செலுத்தி விதையின் தரத்தை அறிந்து பயனடையலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

## Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இலால்குடி வட்டாரத்தில் சம்பா, தாளடி சாகுபடி : நேரடி விதைப்புக்கு வேளாண்மைத்துறை அறிவுறுத்தல்!

திருச்சி, செப்.24

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டாரத்தில் நடப்பு சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கான ஆயத்தப் பணிகள் பல்வேறு இடங்களில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தற்போது நிலவும் கால சூழ்நிலை மற்றும் நீர் இருப்பு குறித்து விவசாயிகளிடையே நிலவி வரும் தெளிவற்ற நிலையைப் போக்கும் வகையில், வேளாண்மைத்துறை சார்பில் முக்கிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சத்தியப்பிரியா தெரிவித்துள்ளதாவது,

**நேரடி நெல் விதைப்பு**

தற்போது நிலவும் நீர் நிலையைப் பயன்படுத்தி விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு முறையை மேற்கொள்வது மிகவும் உகந்தது.

**உத்திரவாதமான நீர் வசதி**

பாதுகாப்பான மற்றும் உத்திர வாதமான நீர் வசதியுள்ள இடங்களில் விவசாயிகள் பயிரை வெற்றிகரமாகக் கொண்டு வர இயலும். அதற்கேற்ற தரமான நெல் ரகங்களை ஒருங் கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் வாங்கிப் பயிர் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**விதைகள் இருப்பு**

விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதமான சான்று பெற்ற நெல் ரக விதைகளும் திரவவடிவ உயிர் உரங்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அவசியமான தொழில்நுட்ப ஆலோசனை களும் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

**பயிர் காப்பீடு செய்வது கட்டாயம்**

விவசாயிகள் தங்கள் சாகுபடிக்குத் தவறாமல் பயிர் காப்பீடு செய்ய வேண்டும். சம்பா நெல் ரூ.589.50 ஒரு ஏக்கருக்கான காப்பீட்டு தொகையை பொது சேவை மையம் (CSC) மூலமாகவோ

அல்லது சம்பந்தப் பட்ட இன்சூரன்ஸ் நிறுவனம் மூலமாகவோ 16-11-2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

கடைசி நேரங்களில் ஏற்படும் சர்வர் பழுது போன்ற தொழில் நுட்பச் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, விவசாயிகள் கடைசி வரை காத்திருக்காமல் முன்கூட்டியே காப்பீடு செய்து பயனடையுமாறு வேளாண்மைத்துறை கேட்டுக்கொள்கிறது.

# மாநில அளவிலான பயிர் மகசூல் போட்டி
# வேளாண்மை துணை இயக்குனர் அறிவுரை

விழுப்புரம், செப்.24

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணை நல்லூர் வட்டாரத்தில், நெல் மகசூலில் மாநில அளவிலான பயிர் மகசூல் போட்டி வேளாண்மை துணை இயக்குனர் ஆத்மா தலைமையில் நடைபெற்றது.




இதில் வேளாண்மை உதவி இயக்குனர் திருவெண்ணெய் நல்லூர், வேளாண்மை உதவி இயக்குனர் கோலியநல்லூர் மற்றும் வேளாண்மை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு விவசாயிகளும் தான் விளைவிக்கும் பொருட்களை ஆர்வமுடன் உற்பத்தியை பெருக்குவதற்கு இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுகிறது.

இதை பயன்படுத்திக் கொண்டு ஒவ்வொரு விவசாயிகளும் உற்பத்தியைப் பெருக்கி பரிசு பெற வேண்டும் என்றும் தங்கள் பயிரிடும் மகசூலைப் பெருக்கி அனைத்து தர மக்களுக்கும் தாங்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் போய் சேர வேண்டும் என்றும் ஒவ்வொரு விவசாயிகளும் ஆர்வமுடன் மாவட்ட அளவிலான மாநில அளவிலான இது போன்ற போட்டிகளில் ஆர்வமாக கலந்து கொண்டு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று எடுத்துரைத்தனர்.

# விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி!



சேலம், செப்.24

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில், பருவநிலை மாற்றத்திற்கான தேசிய நிதியின் கீழ் மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் மற்றும் திறன் மேம்பாட்டிற்காகவும் தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம்கள் நடைபெற்றன.

மணிவிழுந்தான் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமிற்கு சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் அனைவரையும் வரவேற்றுப் பேசி, பருவநிலை பாதுகாப்பு திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து, பயிற்சி-யாளர் பிரவீன் தேனீ வளர்ப்பின் பல்வேறு நன்மைகள் குறித்தும், அப்பகுதியில் வளர்ப்பதற்கு ஏற்ற தேனீ ரகங்கள் குறித்தும் விளக்கமளித்தார். மேலும், புளியங்குறிச்சியைச் சேர்ந்த 'தேனீ' ராஜம்மா தேனீ பெட்டிகளைப் பராமரிப்பது மற்றும் தேனீக்களைப் பாதுகாப்பாகக் கையாள்வது குறித்து நேரில் செயல்விளக்கப் பயிற்சி அளித்தார்.

இதேபோல், காட்டுக்கோட்டை கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குநர் நீலாம்பாள் தலைமையில் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற வேளாண்மை அலுவலர் ஜானகி, விவசாயிகள் தங்களின் பயிர்களுக்குக் காப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். குறிப்பாக, வருகின்ற அக்டோபர் 31-ஆம் தேதிக்குள் மக்காச்சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.491/- பிரீமியம் தொகையாகச் செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்பின், உதவி வேளாண்மை அலுவலர் திவ்யபாலா வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களை விளக்கியதுடன், தற்போது தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத் திட்டத்தின் கீழ் 'அட்வான்ட்டா 752' ரக மக்காச்சோள விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை சரவணன் மட்டும் மனோராகவி ஆகியோர் செய்தனர். இரண்டு கிராமங்களிலும் நடைபெற்ற இந்த பயிற்சி முகாம்களில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



# கடம்பூர் மலை கிராம விவசாயிகளுக்கு மக்காசோளப் பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி




ஈரோடு, செப்.24

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம், வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு மக்காசோளப் பயிர் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி 23.09.26 அன்று குத்தியலத்தூர் கிராமத்தில் நடைபெற்றது, இதில் கடம்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர், பயிற்சி சத்திய மங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தா.சரோஜா, தலைமையில் நடைபெற்றது, மேலும் இப்பயிற்சியில் மைராடா KVK உழவியல் விஞ்ஞானி சரவணக்குமார் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மக்கா சோளப் பயிர் சாகுபடி தொழில்நுட்பம் பற்றியும் உழவியல் முறைகள் குறித்து மற்றும் நீர் நிர்வாகம், களை நிர்வாகம், பூச்சி தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்கமாகவும் விரிவாகவும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கமளித்தார், மேலும் வேளாண்மை உதவி இயக்குநர் விவசாயிகளுக்கு உயிர் உரங்களின் பயன்பாடு அதன் முக்கியத்துவம், இரகம் தேர்வு செய்வது குறித்து கூறினார், சத்தியமங்கலம் வேளாண்மை அலுவலர் மிதுன், மானிய திட்டங்கள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் விவசாயிகள் கேள்விக்கு விளக்கமளித்தார், இப்பயிற்சியினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் வீரமணி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# நாட்டு நலப்பணித் திட்ட நாள் விழா கொண்டாட்டம்



பெரம்பலூர், செப்.24


தந்தை ரோவர் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் நாட்டு நலப்பணித் திட்ட நாள் விழா மற்றும் மரக் கன்று நடும் விழா 24.09.26 அன்று சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு ரோவர் கல்விக் குழுமத்தின் மேலாண்மை தலைவர் முனைவர் வரதராஜன் தலைமை தாங்கினார். ரோவர் கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் ஜான் அசோக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன் மற்றும் இயக்குனர் முனைவர் வஹாப் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கம், சமூக சேவையின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்களின் சமூகப் பொறுப்பு குறித்து எடுத்துரைத்தனர். எனக்காக அல்ல, உனக்காக என்ற நாட்டு நலப்பணி திட்ட கொள்கையை மாணவர்கள் கடைப் பிடித்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மை மற்றும் சமூக நலப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என வலியுறுத்தினர்.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ராமதாஸ் அனைவரையும் வரவேற்று, நாட்டு நலப்பணித் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சமூக சேவையின் முக்கியத்துவம் குறித்து பேசினார். தொடர்ந்து நடைபெற்ற மரக்கன்று நடும் விழாவில் நாட்டு நலப்பணி திட்ட மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்று கல்லூரி வளாகத்தின் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டனர். மேலும், மாணவர்கள் குழுக்களாக இணைந்து வளாகத் தூய்மைப் பணியிலும் ஈடுபட்டனர். மரங்களை பாதுகாப்பது, சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பது மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பது குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. விழாவில் கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரி நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பயிர்களில் வைரஸ் நோய்கள் - கட்டுப்படுத்தும் முறைகள்

வைரஸ் நோய் வந்த பிறகு குணப்படுத்துவதைவிட, நோய் வராமல் தடுப்பதே சிறந்த வழி!

நெல், பச்சைப்பயறு, உளுந்து, துவரை, பருத்தி, கரும்பு, தக்காளி, மிளகாய், பப்பாளி, வாழை, வெண்டை மற்றும் வெள்ளரி போன்ற பயிர்களில் பல்வேறு வைரஸ் நோய்கள் ஏற்பட்டு மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன.

**வயலில் கவனிக்க வேண்டிய முக்கிய அறிகுறிகள்**

**நெல் – டங்ரோ நோய்**

- இலைகள் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறமாக மாறுதல்
- செடி குட்டையாகுதல்
- தூர்கள் குறைதல்

**பச்சைப்பயறு & உளுந்து – மஞ்சள் தேமல் நோய்**

- இலைகளில் மஞ்சள் – பச்சை நிற மொசைக் திட்டுகள்
- செடி வளர்ச்சி குன்றுதல்
- பூ மற்றும் காய் பிடித்தல் குறைதல்

**துவரை – ஸ்டெரிலிட்டி மொசைக் நோய்**

- இலைகளில் மொசைக் அறிகுறிகள்
- அதிக கிளைகள் தோன்றுதல்
- பூ மற்றும் காய் உருவாகாமல் மலட்டுத்தன்மை ஏற்படுதல்

**பருத்தி – இலைச்சுருள் வைரஸ் நோய்**

- இலைகள் சுருண்டு காணப்படுதல்
- நரம்புகள் தடித்தல்
- செடி வளர்ச்சி குறைதல்

**கரும்பு – மொசைக் வைரஸ் நோய்**

- இலைகளில் வெளிர் மற்றும் அடர் பச்சை நிற கோடுகள்
- செடி வளர்ச்சி குறைதல்
- தண்டு வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிப்பு

**தக்காளி – இலைச்சுருள் வைரஸ்**

- இலைகள் சுருண்டு சிறிதாகுதல்
- நரம்புகள் தடித்தல்
- செடி குட்டையாகுதல்
- பூ மற்றும் காய் உற்பத்தி குறைதல்

**மிளகாய் – இலைச்சுருள் வைரஸ்**

- இலைகள் சுருண்டு காணப்படுதல்
- இலைகள் சிறிதாகுதல்
- செடி வளர்ச்சி குன்றுதல்
- காய் உற்பத்தி குறைதல்

**பப்பாளி – ரிங்ஸ்பாட் வைரஸ்**

- இலைகளில் மொசைக்
- இலை வடிவம் மாறுதல்
- பழங்களில் வளைய வடிவ புள்ளிகள்
- பழங்களின் அளவு குறைதல்

**வாழை – பன்சி டாப் வைரஸ்**

- இளம் இலைகள் குறுகி மேல்நோக்கி நிற்றல்
- இலைகள் கொத்து போல தோன்றுதல்
- செடி வளர்ச்சி குன்றுதல்

**வெண்டை – மஞ்சள் நரம்புத் தேமல் நோய்**

- இலை நரம்புகள் மஞ்சள் நிறமாகுதல்
- பின்னர் முழு இலை மஞ்சளாதல்
- காய்கள் சிறிதாகுதல்

**வெள்ளரி – மொசைக் வைரஸ்**

- இலைகளில் மொசைக் திட்டுகள்
- இலை சுருக்கம் மற்றும் வடிவ மாற்றம்
- கொடி வளர்ச்சி குன்றுதல்
- பழங்கள் வடிவம் மாறுதல்

**நோய் பரப்பும் பூச்சிகளைக் கவனியுங்கள்!**

பல வைரஸ் நோய்கள் வெள்ளை ஈ, அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் த்ரிப்ஸ் போன்ற பூச்சிகளால் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு பரவுகின்றன.

**வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்**

- ஆரோக்கியமான விதை மற்றும் நடவுப் பொருட்களைப் பயன்படுத்துதல்
- நோயற்ற, சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் நாற்றுகளைப் பயன்படுத்த வேண்டும்.
- நோயுற்ற வயலிலிருந்து நடவுப் பொருட்களை எடுக்கக் கூடாது.

**நோயுற்ற செடிகளை அகற்றுதல்**

- வயலைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- நோயுற்ற செடிகளை வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும்.

● வைரஸுக்கு மாற்று விருந்தோம்பிகளாக இருக்கும் களைகளை அகற்ற வேண்டும்.

**பூச்சி நோய் கடத்திகளைக் கட்டுப்படுத்துதல்**

● வயலைத் தொடர்ந்து கண்காணிக்கவும்.
● அசுவினி, வெள்ளை ஈ, த்ரிப்ஸ், தத்துப்பூச்சி போன்றவை பல வைரஸ் நோய்களைப் பரப்புகின்றன.
● பூச்சிகளின் எண்ணிக்கையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
● மஞ்சள் ஒட்டும் பொறிகளைப் பயன்படுத்தி வெள்ளை ஈ போன்ற பூச்சிகளைக் கண்காணிக்கவும்.
● தேவைக்கேற்ப ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறை களைப் பயன்படுத்த வேண்டும்.

**வயல் சுகாதாரம்**

● வயல் மற்றும் சுற்றுப்புற களைகளை அகற்றவும்.
● நோயுற்ற செடிகளை ஆரம்ப நிலையிலேயே பிடுங்கி அழிக்கவும்.
● அறுவடைக்குப் பின் பயிர்க் கழிவுகளை அகற்ற வேண்டும்.
● நோயுற்ற மற்றும் ஆரோக்கியமான செடிகளுக்கு இடையில் தேவையற்ற தொடர்பைத் தவிர்க்க வேண்டும்.

**எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களைப் பயன்படுத்துதல்**

● கிடைக்கும் போது வைரஸ் எதிர்ப்பு அல்லது தாங்கும் திறன் கொண்ட ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும்.
● வாழையில் வைரஸ் நோய் பிரச்சினைகளைத் தவிர்க்க சான்றளிக்கப்பட்ட வைரஸ் இல்லாத திசு வளர்ப்பு நாற்றுகளை பயன்படுத்துவது முக்கியம்.

**கருவிகளைச் சுத்தமாக வைத்தல்**

● கத்தி, கத்தரிக்கோல் போன்ற கருவிகளைச் சுத்தம் செய்து கிருமிநாசினியால் சுத்திகரிக்க வேண்டும்.
● கத்தரித்தல், ஒட்டுக்கட்டுதல் போன்ற பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

**விவசாயிகள் கவனத்திற்கு முக்கிய குறிப்பு**

வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட செடிக்கு பொதுவாக நேரடி

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

குணப்படுத்தும் மருந்து இல்லை. எனவே, நோய் வராமல் தடுப்பது, நோயற்ற விதை/நடவுப் பொருட்களைப் பயன்படுத்துவது, நோயுற்ற செடிகளை அகற்றுவது மற்றும் வைரஸ் கடத்தும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது ஆகியவையே முக்கிய மேலாண்மை முறைகளாகும்.

நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவோம்; வைரஸ் பரவலைத் தடுப்போம்; மகசூலைப் பாதுகாப்போம்!

தொகுப்பு : ***கா.அரிபுத்திரன் எம்.எஸ்.சி அக்ரி ,வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் , விருதுநகர்– 82480 80922.***

